# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Witness for : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாண்டி** | Caste | : |
| Father/Husband Name | : **கோட்டைசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.03.2026**

**முதல்விசாரணை**

நான் கருமாத்துார் அருகில் உள்ள மூணாண்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது அம்மா பேச்சியம்மாள் ஆவார். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை விபத்தை பற்றி தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றேன். கடந்த 13.02.2022ம் தேதி காலை சுமார் 7-9 மணி இருக்கும் கருமாத்துார் செட்டிகுளம் செல்லும் பாதையில் எனது அம்மா சேர் ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த போது ஓட்டுநர் மற்றொரு வண்டியை போட்டிபோட்டு சென்றபோது திடீர் என்று பீரேக் பிடித்தால் எனது அம்மா தவறி கீழே விழுந்துவிட்டார். நான் தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன். எனது அம்மாவிற்கு பின்தலையில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டிருந்தது. நான் உசிலம்பட்டி மருத்துவமனைக்கு எனது அம்மாவை 108 ஆம்புலன்ஸ்சில் கொண்டு சென்றோம். அங்கு 3 நாட்கள் சிகிச்சை எடுத்து பின்பு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக நான்

காவல்நிலையத்தில்புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மதுரை முத்துப்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அங்கிருந்து சம்பவ இடத்திற்கு வர 45 நிமிடங்களாகும் என்றால் சரிதான். சம்பவ நடந்த சாலை ஆற்றுகால்வாய் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையானது குண்டு குழியுமாக இருக்கும் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சேர் ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த போது ஓட்டுநர் மற்றொரு வண்டியை போட்டிபோட்டு சென்றபோது திடீர் என்று பீரேக் பிடித்தால் எனது அம்மா கீழே விழுந்துவிட்டதாக எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா காலையில் சாப்பிடாமல் சென்றதால் பசி மயக்கத்தில் தவறி வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அம்மாவுடன் ஆட்டோவில் சென்ற மற்ற நபர்களுக்கு காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது அம்மா மருத்துவமனையில் பேசி நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மா சுயநினைவில் இல்லாமல் இருந்தார் என்று எனது புகாரிலும்போலீசார் விசாரணையிலும் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் சம்பவம் நடந்து ஐந்து நாட்கள் கழித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்பந்தமாக வழக்கு போட்டு இழப்பீடு பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லும் முன்பு எனது அம்மாவை மருத்துவமனையில் சேர்த்துவிட்டார்கள் என்றும் இந்த வழக்கிற்காக நான் எனது அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது அம்மா இறப்பிற்கு இழப்பீடு பெறுவதற்காக நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.